*(நிறுவனத்தின் ஆண்டறிக்கை - 2014 இல் பக்கம் 12 - 15 வரையுள்ள அவைத் தலைவியின் செய்தியின் தமிழ் மொழிபெயர்ப்பு)*

## அவைத் தலைவியின் செய்தி

நிறுவனத்தின் இயக்குனர்கள் சபையின் சார்பாக உங்கள் அனைவரையும் எமது 13ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டத்திற்கு அழைப்பதில் மகிழ்ச்சியடைவதோடு 2014 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையையும் மற்றும் கணக்கியல் விபரங்களையும் சமர்ப்பிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

**பொருளாதாரம்**
2013 ஆம் ஆண்டில் 7.2% ஆக இருந்த மொத்த உள்நாட்டு உற்பத்தியை (மொ.உ.உ) 2014 ஆம் ஆண்டில் 7.8%ஆக அதிகரிப்பதற்கு எமது நாட்டினால் முடியுமாக இருந்துள்ளது. இது பிரதானமாக கைத்தொழில்துறையில் ஏற்பட்ட 12.5% வளர்ச்சியினால் அடையப்பெற்ற பெறுபேறாகும். எனினும் விவசாயத்துறை மிகவும் மந்தகதியிலேயே தனது வளர்ச்சியைக் காட்டியது. இதற்கான பிரதான காரணம் பொருத்தமற்ற காலநிலைக் காரணிகளாகும். சேவைத்துறையைப் பொறுத்த வரையில் வளர்ச்சி வீதம் 6.4% ஆக உள்ளது. இலங்கை மத்திய வங்கி (CBSL) வருடம் முழுவதும் குறைந்த வட்டி வீதத்தின் அடிப்படையில் நெகிழ்வான நிதிக் கொள்கை ஒன்றினை பேணி வந்துள்ளது. எனவே இது வரலாற்று ரீதியாகப் பார்க்கும் போது மிகவும் குறைந்த மட்டத்தைக் காட்டுகின்றது. இதற்கமைய அனைத்து நிதிச் சந்தை வீதங்களும் இவ்வருட காலப்பகுதியில் குறைவடைந்துள்ளன. உதாரணமாக 12 மாதகால திறைசேரி உண்டியல் வீதம் வருட ஆரம்பத்தில் இருந்த 8.29% இல் இருந்து 6% ஆகக் குறைவடைந்துள்ளது. எனினும் தனியார்துறை கடன் விகிதம் எதிர்பார்த்த அளவில் 2014 ஆம் ஆண்டு இறுதி இரு காலாண்டில் வளர்ச்சியடைந்த போதிலும் அது சிறந்த பெறுபேற்றை அளிக்கவில்லை. எனவே நிதிச்சந்தை நிதியங்கள் படிப்படியாக பங்குச்சந்தை மற்றும் காப்புறுதிச் சந்தைகளை நோக்கி நகர்ந்துள்ளது. ஆயினும் ஆற்றல் சக்தி குறைவு காரணமாக காப்புறுதித் துறையினால் அடையப்பெற்ற அனுகூலங்கள் மிகச் சிறு பகுதியாகும். ஒரு நிலையான மாற்று விகிதத்துடன் அடைந்து கொண்ட நடுத்தர திரவ மட்டம் மற்றும் உலகளாவிய ரீதியில் பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பன வருடாந்த சராசரி பணவீக்க விகிதத்தை 2014 ஆம் ஆண்டு டிசம்பர் மாத இறுதியில் 3.3%க்கு குறைத்துள்ளது.

**காப்புறுதி துறை**
காப்புறுதித்துறை மிகவும் மந்தகதியிலேயே தனது வளர்ச்சியை வெளிப்படுத்தியுள்ளதுடன், ஒரு தனி இலக்க வளர்ச்சியை மாத்திரம் காட்டியுள்ளது. ஆயுள் காப்புறுதித்துறை 9% ஆல் அதிகரித்த அதேவேளை பொதுக் காப்புறுதித்துறை 4% ஆல் மாத்திரமே அதிகரித்துள்ளது. இதற்குரிய காரணம் நடுத்தர தனியார்துறை கடன் வளர்ச்சியாகும். எனினும் காப்புறுதி சந்தையிலுள்ள நடுத்தர செயற்பாட்டாளர்கள் இரு சந்தையிலும் முன்னனியிலுள்ள பெரியளவிலான செயற்பாட்டாளர்களின் சந்தை இழப்பில் தமது சந்தைப் பங்குகளை முன்னேற்றியுள்ளமை காரணமாக மேம்பட்டுள்ளனர்.

**ஒழுங்குபடுத்தல் கட்டமைப்பு**
ஆயுள் மற்றும் பொதுக் காப்புறுதி வர்த்தகங்கள் இரண்டையும் இரு பிரத்தியேக நிறுவனங்களாகப் பிரிவு படுத்துவதற்கான முடிவடையும் காலம் 2015 ஆம் ஆண்டாகும். பல்வேறுபட்ட சவால்களுக்கு மத்தியில் HNB அஷூரன்ஸ் உட்பட பெரும்பான்மையான நிறுவனங்கள் இந்த நடைமுறையை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ளன. எனினும் சில பாரிய முதலீட்டாளர்கள் 2015 ஆம் ஆண்டு பெப்ரவரி மாத நடுப்பகுதியில் இருந்து கட்டாயமாகப் பின்பற்றப்பட வேண்டிய ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளுடன் இணங்கி ஒழுங்குபடுத்தப்படவில்லை என்பது அவதானத்தில் கொள்ளவேண்டிய ஒரு விடயமாக அமைந்துள்ளது. இது ஒரு குறிப்பிட்ட மட்ட செயற்பாட்டைப் பேணிப் பாதுகாத்தல் தொடர்பான பரந்த இலக்குடனும் முதலீட்டாளர்களுக்கு இடையில் தேவையற்ற போட்டியைத் தவிர்த்தல் ஆகியவற்றிற்கும் வழியமைக்கின்றது.

2016 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் திகதியில் இருந்து அமுலுக்கு வரக்கூடிய வகையில் இடர் அடிப்படை முதலீடு (RBC) என்பதை நடைமுறைப்படுத்தி சிறந்த வளர்ச்சி ஒன்றை ஏற்படுத்துவதில் IBSL அனுசரணை வழங்கியுள்ளது. இவ்வாறான செயற்பாடுகள் இத்துறையில் உள்ள அனைத்து காப்புறுதி நிறுவனங்களுக்கும் ஒரு கிரமமான ஒழுங்குபடுத்தல் ஊடாக பிரயோகிக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**ஆயுள் மற்றும் பொதுக் காப்புறுதியை பிரித்தல்**

எமது நிறுவனமானது ஆயுள் மற்றும் பொதுக் காப்புறுதித் துறைகளை இரு பிரத்தியேக சட்ட அமைப்புகளாக மாற்றும் நடைமுறையை 2011 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க காப்புறுத்துறை ஒழுங்குபடுத்தல் சட்டத்திற்கு இணங்க வெற்றிகரமான முறையில் பூர்த்தி செய்துள்ளது. HNB ஜெனரல் இன்ஷுரன்ஸ் லிமிடெட் என்ற பெயரின் கீழ் முழுமையான உரிமை கொள்ளப்பட்ட உப நிறுவனம் ஒன்றை ஸ்தாபிப்பதன் ஊடாக இது நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் பொதுக் காப்புறுதி வர்த்தகம் 2015 ஜனவரி 01 ஆம் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் புதிய நிறுவனத்திற்கு கைமாற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்நடைமுறை மிகவும் சீரான முறையில் பங்குதாரர்கள், வாடிக்கையாளர்கள், ஊழியர்கள், ஒழுங்குபடுத்துநர்கள் மற்றும் நீதிமன்றம் உள்ளடங்கலாக அனைத்து பங்குபற்றுநர்களுடனும் சீராக முகாமைத்துவம் செய்யப்பட்டது என்பதை குறிப்பிடுவதில் மிகவும் மகிழ்ச்சிகரமாகவுள்ளது. இதற்கு அமைய HNB அஷுரன்ஸ் பீஎல்சி அதன் எல்லையை ஆயுள் காப்புறுதியுடன் மட்டுபடுத்துவதுடன் புதிதாக உருவாக்கப்பட்ட உப நிறுவனம் ஊடாக பொது காப்புறுதி சேவைகளை வழங்க உள்ளது.

**செயற்பாட்டு நிறைவேற்றம்**

இன்றுள்ள சூழ்நிலைகளில் சிறிய நிறுவனங்கள் தமது செயற்பாட்டை வருடந்தோறும் முன்னேற்றுவதில் பல சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளன. எனினும் HNB அஷுரன்ஸ் தொடர்ச்சியாக கவர்ச்சிகரமான வளர்ச்சியைக் கண்டுள்ளது என்பதை அறிவிப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். 2013 ஆம் ஆண்டில் அடையப்பெற்ற வளர்ச்சியோடு ஒப்பிடுகையில் 2014 ஆம் ஆண்டு மொத்த வருமானத்தில் 20% வளர்ச்சியைக் காட்டுகின்றது. இரண்டு துறைகளும் இவ்வளர்ச்சியில் பங்குபற்றியுள்ளன என்பதைக் குறிப்பிடுவது முக்கியமாகும். ஆயுள் காப்புறுதித்துறை 16% ஆகவும் பொதுக் காப்புறுதித்துறை 25% ஆலும் குறிப்பிடத்தக்களவில் தமது பங்களிப்பை மேற்கொண்டுள்ளன. ஆயுள் மற்றும் பொது ஆகிய இரு காப்புறுதிகளும் சராசரி சந்தை வளர்ச்சி விகிதத்திற்கு மேற்பட்ட வளர்ச்சியைக் காட்டியுள்ளன. அதாவது ஆயுள் காப்புறுதி 9% ஆகவும் பொதுக் காப்புறுதி 4% வளர்ச்சி வீதத்தையும் காட்டுகிறது. இது நிறுவனத்தின் சந்தைப் பங்குகளை குறிப்பிடத்தக்க அளவில் ஆயுள் காப்புறுதியை 5.25% ஆகவும் பொதுக் காப்புறுதியை 4% ஆகவும் அதிகரிக்க வழியமைத்துள்ளது.

வர்த்தகத்தில் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியையும் தனது சந்தை நிலையையும் முன்னேற்றியுள்ள அதேவேளையில் தமது பங்குதாரர்களுக்கு பெறுமதிமிக்க சேவைகளை வழங்கியமைக்கான பதிவுகளைப் பேணுவதன் ஊடாக HNB அஷுரன்ஸ் 2014 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டில் வரிக்குப் பிந்திய இலாப வளர்ச்சி வீதத்தை 7% ஆக பதிவு செய்துள்ளது. இது பாராட்டுக்குரிய விடயமாகும். ஏனெனில் நிறுவனம் வரிக்குப் பின்னரான இலாப வளர்ச்சியை தொடர்ச்சியாக தனது 10வது வருடத்திலும் வெற்றிகரமாகக் காட்டி நிற்கின்றது.

**பங்குலாபம்**

திருப்திகரமான வரிக்குப் பின்னரான இலாப வளர்ச்சியின் அடிப்படையில் இயக்குநர் சபை பங்கு ஒன்றிற்கான முதன்மை மற்றும் இறுதி பங்கு இலாபமாக ரூபா 3.75 பிரேரிக்கின்றது. இது கடந்த நிதியாண்டில் வெளிப்படுத்தப்பட்ட பங்குலாபத்தைவிட 15% அதிகமாகும்.

**கூட்டாண்மை சமூகப்பொறுப்புத் திட்டங்களின் நிலைபேண் தன்மை (CSR)**

நிறுவனம் பாடசாலைகளுக்கு தண்ணீர் வசதியை வழங்கும் நடவடிக்கை ஊடாக தனது CSR திட்டத்தைத் தொடர்ந்தும் பேணி வருகின்றது. இக்காலப்பகுதியில் இத்திட்டத்தின் கீழ் மேலும் அதிகமாக 6 பாடசாலைகளுக்கு தண்ணீர் வசதியை விஸ்தரித்துள்ளது. இந்த முக்கியமான நிகழ்ச்சித் திட்டம் 2008 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதுடன் இதுவரையில் 33 பாடசாலைகளுக்கு வசதியை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. இதன் மூலம் 21 மாவட்டங்களில் பெருமளவான பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர் மத்தியில் ஒரு தனியிடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளது. நிறுவனம் தனது 'ஸ்கூல் டு ஒபீஸ்' (S2O) என்ற நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக பாடசாலையை விட்டு விலகிய 100 மாணவர்களுக்கு சிக்கல்மிக்க தொழில் சூழ்நிலைகளில் எவ்வாறு வெற்றி பெறலாம் என்பதற்குத் தேவையான அடிப்படை நிபுணத்துவத்தை வழங்கி வருகின்றது. சமூகக் கடப்பாட்டை அடிப்படையாகக் கொண்டு மேலும் பல நடவடிக்கைகளை நிறுவனம் நடைமுறைப்படுத்துவதுடன் விழிப்புணர்வற்றோர், மன நலம் பாதிக்கபட்டோர், சிறுநீரக நோயாளிகள், வரட்சி மற்றும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் உட்பட சமூகத்தில் ஒதுக்கப்பட்ட அனைத்து சமுகத்தினரிட்கும் தனது சேவைகளை விரிவாக்கம் செய்துள்ளது.

**விருதுகள்**

எமது நிறுவனம் உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் நிதி அறிக்கையிடல், கூட்டுறவு ஆட்சி, இலத்திரனியல் சந்தைப்படுத்தல் மற்றும் மனிதவள அபிவிருத்தி ஆகிய துறைகளில் பல விருதுகளை தொடர்ச்சியாகப் பெற்று வருகின்றது. இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் (CA SRILANKA) நடாத்தப்பட்ட 50வது வருடாந்த அறிக்கை விருது வைபவத்தில் காப்பறுதித் துறையில் சிறந்த வருடாந்த அறிக்கைக்கான தங்க விருதினையும், கூட்டுறவு ஆட்சி வெளிப்படுத்தலுக்காக வெள்ளி விருதினையும் எமது நிறுவனம் சுவீகரித்துக் கொண்டது. காப்புறுதித் துறையில் 2013 ஆம் ஆண்டு கூட்டுறவு ஆட்சி வெளிப்படுத்தலுக்கான சார்க் ஆண்டு பூர்த்தி விருதில் காப்புறுதித் துறையில் சிறந்த வருடாந்த அறிக்கை சமர்ப்பித்தல் விருது, கூட்டுறவு சமூக பொறுப்பில் மனிதவள நடைமுறைகளை பின்பற்றுவதற்கான விருது, ஆசியா பசுபிக் மனித வள முகாமைத்துவ காங்கிரஸ் (SLITAD) விருது வைபவத்தில் மனிதவள அபிவிருத்திக்கான வெள்ளி விருது, 2014 ஆம் ஆண்டு சிங்கப்பூரில் நடைபெற்ற 5வது சமூக ஊடக மற்றும் இலத்திரனியல் சந்தைப்படுத்தல் விருது வைபவத்தில் முகநூலை இலத்திரனியல் சந்தைப்படுத்தலுக்காக சிறந்த முறையில் பயன்படுத்தியமைக்கான விருதினையும் (CMO Asia Awads for Social Media and Digital Market Excellence) சுவீகரித்துக்கொண்டுள்ளது என்பதை இங்கு குறிப்பிடுவது முக்கியமான விடயமாகும்.

லங்கா மந்திலி டைஜஸ்ட் (Lanka Monthly Digest – LMD) சஞ்சிகையால் தொகுக்கப்பட்ட இலங்கையில் முன்னணி வகிக்கும் 100 நிறுவனங்களின் பட்டியலில் எமது நிறுவனம் தனது பெயரைத் தக்க வைத்துக்கொண்டுள்ளது.

**எதிர்கால வெளித்தோற்றம்**

2015 ஆம் ஆண்டு HNBA அஷ்ரன்ஸ் பீஎல்சீ தனது பொதுக் காப்புறுதி வர்த்தகத்தை தனது உப நிறுவனத்திற்கு கைமாற்றம் செய்ததன் மூலம் ஆயுள் காப்புறுதி சேவை வழங்குநர் என்ற வகையில் தனது இடத்தைப் அமைத்துக்கொள்ளும். HNB அஷ்ரன்ஸ் எதிர்காலத்தில் நாட்டில் ஆறாவது சிறந்த ஆயுள் காப்புறுதி சேவை வழங்குநர் என்ற நிலையை பலப்படுத்தும் அதேவேளை முதல் ஐந்து நிறுவனங்களுக்குள் முன்னேறும் தனது இலக்கினையும் நோக்கி பயணிக்கும். இவ்விலக்குகளை எட்டும் வகையில் தன்னிசியான மற்றும் கூட்டிணைந்த வளர்ச்சி உபாயங்களைப் பயன்படுத்தும். மேலும் தனது சேவைகளை ஓய்வூதியம் பெறுவோர் மற்றும் நுண் காப்புறுதி வாடிக்கையாளர் போன்றவர்களுக்கு குறிப்பிடத்தக்களவு சேவைகளை வழங்குவதன் மூலம் விரிவாக்கம் செய்யவும் எண்ணியுள்ளது.

நிறுவனம் 2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நியதிச்சட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க தன்னுடைய உப நிறுவனத்தை பங்கு சந்தையில் நிரற்படுத்த உத்தேசித்துள்ளது. இந்த அட்டவணைப்படுத்தல் செயற்பாட்டை நடைமுறைப்படுத்தும் வகையில் நிறுவனம் தன்னுடைய பங்குரிமையில் ஒரு பகுதியை விடுவிக்கும்.

**ஓப்புரை**

திரு.பிரதாப்குமார் டி சில்வா சபையில் இருந்து 2014 ஆம் ஆண்டு மே 21 ஆம் திகதி அமுலுக்கு வரும் வகையில் இராஜினாமா செய்து புதிதாக உருவாக்கப்பட்ட HNB ஜெனரல் இன்ஷுரன்ஸ் லிமிடெட் உப நிறுவனத்தில் பணிப்பாளர் சபையில் பங்குபெறுகிறார். 2008 மார்ச் மாதம் 31 ஆம் திகதியில் இருந்து ஒரு பணிப்பாளர் என்ற அடிப்படையில் நிறுவனத்திற்கு வழங்கிய பெறுமதிமிக்க பங்களிப்புக்காக நான் அவருக்கு நன்றியை தெரிவித்துக் கொள்வதுடன் புதிய உப நிறுவனத்தில் தொடர்ந்தும் தனது ஆதரவை வழங்குவார் என்று எதிர்பார்க்கின்றேன்.

**நியமனங்கள்**

இவ்வருட காலப்பகுதியில் பணிப்பாளர்களின் எண்ணிக்கையை 10 ஆக பேணும் வகையில் புதிய நியமனம் ஒன்று வழங்கப்பட்டது. இதன்படி 2014 ஆம் ஆண்டு ஜுன் 17 ஆம் திகதியில் இருந்து அமுலுக்கு வரும் வகையில் பணிப்பாளர் சபையில் இணைந்து கொண்ட கலாநிதி சிவகுமார் செல்லையா அவர்களை மிகவும் அன்புடன் வரவேற்கின்றேன். அவரது முதலீட்டு முகாமைத்துவத்திலுள்ள அறிவு மற்றும் அனுபவத்தின் மூலம் அவர் இப்புதிய நிறுவனத்தை உயர்நிலைக்கு வழி நடத்தி செல்வார் என நம்பிக்கை கொள்கின்றேன்.

**பாராட்டுக்கள்**

2014 ஆம் ஆண்டு எமக்கு ஆலோசனைகளையும் தொடர்ச்சியான ஆதரவையும் வழங்கிய IBSL நிறுவனத்தினுடைய தலைவர், பணிப்பாளர் நாயகம் மற்றும் ஏனைய அலுவலர்களுக்கு எமது நன்றியை இவ்விடத்தில் பதிவு செய்துகொள்ள விரும்புகின்றோம். எம்முடன் தொடர்ச்சியாக இக்காப்புறுதித் துறையின் வளர்ச்சிக்கு பங்களிப்பை வழங்கி வந்த காப்புறுதி குறைகேள் அதிகாரி அவர்களினால் வழங்கப்பட்ட குறிப்பிடத்தக்க அளவான பங்களிப்பினையும் பாராட்டுகின்றோம். நான் என்னுடைய சக பணிப்பாளர்களுக்கு அவர்களால் வழங்கப்பட்ட ஆதரவு, ஆலோசனை ஒத்துழைப்பு என்பவற்றுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த நிறுவனத்தின் நன்மதிப்பைப் பெற்றுக்கொள்ளவும் சிறந்த பெறுபேறுகளை பெற்றுக்கொள்ளவும் திறமையுடன் செயலாற்றிய முகாமைத்துவ பணிப்பாளர் மற்றும் முகாமைத்துவ மட்டத்திலான அனைத்து அலுவலர்கள் மற்றும் ஏனைய சகல ஊழியர்களுக்கும் அவர்களின் அர்ப்பணிப்பு சேவைக்கும் எனது பாராட்டுதல்களை தெரிவிக்கின்றேன்.

இயக்குனர்கள் சபை சார்பாக இந்நிறுவனம் தனது புதிய உபநிறுவனத்துடன் இணைந்து அதன் அனைத்து பங்குபற்றுனர்களுக்கும் கூட்டுறவு ஆட்சியின் உயரிய தரங்களையும் ஒழுக்க நடத்தையையும் தக்கவைத்துக்கொள்வதன் மூலம் தொடர்ச்சியான சிறந்த பெறுமதிகளை தொடர்ந்தும் வழங்குமென உறுதி கூறுகிறேன்.

கலாநிதி ராணி ஜயமகா
அவைத் தலைவர்
09 பெப்ரவரி 2015

*(நிறுவனத்தின் ஆண்டறிக்கை - 2014 இல் பக்கம் 16 - 23 வரையுள்ள நிர்வாகப் பணிப்பாளரின் மீளாய்வின் தமிழ் மொழிபெயர்ப்பு)*

## முகாமைத்துவப் பணிப்பாளரின் மீளாய்வு

2014 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குக் கூற்றுக்களைச் சமர்ப்பிப்பது எனக்கு மிகவும் மகிழ்ச்சியைத் தருகிறது. இது எமது ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையின் மூன்றாவது வெளியீடாகும். நாம் வெளியிட்ட எமது முதலிரண்டு அறிக்கைகளும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட வருடாந்த அறிக்கைகளுக்கான விருது வழங்கல் நிகழ்ச்சியில் பங்குபற்றிய காப்புறுதிக் நிறுவனங்களுள் சிறந்த காப்புறுதி நிறுவனம் என்ற இடத்தை அடைந்துள்ளது. மேலும் நாம் தயாரித்த 2013 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான இறுதி அறிக்கை அதே போட்டியில் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனங்களுள் கூட்டுறவு ஆட்சி வெளிப்படுத்தல் என்ற தலைப்பின் கீழ் இரண்டாவது இடத்தைப் பெற்றது. நாம் இவ்வறிக்கை ஊடாக எமது அனைத்து முக்கியமான பங்குபற்றும் குழுக்களுக்கும் பயனுள்ள தகவல்களை வழங்குவதற்கு மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதற்கு முயற்சிக்கிறோம்.

### தொழிற் சூழல்

காப்புறுதித்துறை 2014 ஆம் ஆண்டு எந்தவித விறுவிறுப்பான வளர்ச்சியையும் காட்டத் தவறியுள்ளதுடன் அதன் வளர்ச்சி விகிதத்தில் ஒரு வீழ்ச்சியை எடுத்துக்காட்டுகிறது. 2013 ஆம் ஆண்டு 9% வளர்ச்சியில் இருந்து பொதுக் காப்புறுதித்துறை 4% ஆல் அதன் வளர்ச்சி வீதத்தில் குறைவடைந்துள்ளமை ஒரு குறிப்பிடத்தக்க சான்றாகும். ஆயுள் காப்புறுதித்துறை கூட 2013 ஆம் ஆண்டில் பெற்ற 10% வளர்ச்சி வீதத்தில் இருந்து 2014 ஆம் ஆண்டு 9% ஆக வீழ்ச்சியடைந்துள்ளது. காப்புறுதிச் சந்தையின் கூட்டு வளர்ச்சி வீதம் 6% ஆகவுள்ளது. குடித்தன வருமானத்தில் ஏற்பட்ட குறைந்த வளர்ச்சி ஆயுள் காப்புறுதித்துறையில் குறைந்த வளர்ச்சி வீதத்தைப் பெறுவதற்கு ஒரு காரணியாக பங்களிப்புச் செய்திருக்கலாம். அதேவேளையில் வாகனங்களை இறக்குமதியில் ஏற்பட்ட குறைந்தளவு வளர்ச்சி மற்றும் தனியார்துறையின் கடன் விரிவாக்கத்தில் ஏற்பட்ட குறைந்தளவு வளர்ச்சி என்பன பொதுக் காப்புறுதித்துறையில் குறைந்த வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்திருக்கலாம். எனினும் நடுத்தர அளவிலான நிறுவனங்கள் பெரியளவு முதலீட்டாளர்களின் செலவில் சந்தையில் பங்குகளை பெற்றுக்கொள்வதில் மிக விரைவாக வளர்ச்சியடைந்து வருவது ஒரு முன்னேற்றமான விடயம் என்பதை கவனிக்க வேண்டும். இதன் விளைவாக முன்னிலை வகிக்கும் ஐந்து நிறுவனங்களின் கூட்டு சந்தை பங்கு ஆயுள் மற்றும் பொதுக் காப்புறுதிச் சந்தைகளில் 74% ஆக தக்கவைத்துக் கொண்டது.

### செயற்பாட்டு நிறைவேற்றல் தொடர்பான ஒரு மீள்பார்வை

நாம் நிறுவனத்தை இரு வேறு சட்ட உறுப்பாண்மைகளாக பிரித்தல் தொடர்பான நடவடிக்கையை வெற்றிகரமாக பூர்த்தி செய்தமையினால் கடந்த வருடம் நிறுவனத்துக்கு ஒரு முக்கியமான வருடமாகும். 2016 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் திகதியில் இருந்து செயற்பாட்டுக்கு வரக்கூடிய வகையில் உள்ள புதிய இடர் அடிப்படையிலான முதலீட்டு (RBC) கட்டமைப்பை அமுல்படுத்துவதற்கு நாம் எம்மைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டும். நான் என்னுடைய கடந்த வருட மீளாய்வில் ''மேலே குறிப்பிடப்பட்ட விடயங்களைப் பூர்த்தி செய்வதற்கு முகாமைத்துவ நேரத்தில் இருந்து குறிப்பிடத்தக்களவு நேரம் பயன்படுத்தப்பட வேண்டியுள்ள அதேவேளையில் நிறுவனத்தின் அனைத்து ஊழியர் மற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்கள் ஆகியோர் முகாமைத்துவக் குழுவுடன் இணைந்து கடந்த வருடத்தில் ஸ்தாபிக்கப்பட்ட விரைவான வளர்ச்சியை தொடர்ந்தும் பேணிப் பாதுகாக்க தங்களை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும்'' என நான் குறிப்பிட்டிருந்தேன். மேலும் மந்தகதியில் இருந்த சந்தைச் சூழ்நிலைகளில் கூட நாம் வழங்கிய வாக்குறுதியை காப்பாற்றும் வகையில் எம்மால் செயற்பட முடிந்தது என்பதை நான் இங்கு பெருமையுடன் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

2014 ஆம் ஆண்டு நிறுவனம் தனது மொத்த வருமானத்தில் 20% வளர்ச்சியைப் பெற்றுக்கொள்ள இயலுமாக இருந்துள்ளது. இது 2013 ஆம் ஆண்டில் இருந்த 21% வளர்ச்சியில் இருந்து சொற்ப அளவே குறைந்துள்ளது. செயற்திறன்மிக்க இவ்வருடத்தில் ஆயுள் மற்றும் பொதுக் காப்புறுதித் துறைகள் இவ்வளர்ச்சியில் குறிப்பிடத்தக்களவு பங்கினை வகித்தது என்பது முக்கியமான ஒரு அம்சமாகும்.

பொதுக் காப்புறுதித்துறை 25% வளர்ச்சியை வழங்கியுள்ளதோடு ஆயுள் காப்புறுதித்துறையும் 16% வளர்ச்சியுடன் தன்னுடைய ஆற்றலை நிரூபித்துள்ளது. மொத்த வியாபாரத்திலும் இருந்து பெறப்பட்ட மொத்த காப்புறுதி விண்ணப்பக் கணிப்புக் கட்டணம் (GWP) ரூபா 2.3 பில்லியனைத் தாண்டியுள்ளது. அதேவேளை ஆயுள் காப்புறுதித்துறை அதனுள் ஒரு சிறிய உயர்ச்சியைப் பிரதிபலிக்கின்றது.

சந்தை வளர்ச்சி வீதங்களோடு ஒப்பிடுகையில் நிறுவனம் குறிப்பிடத்தக்களவு உயரிய வளர்ச்சி வீதத்தை அடைந்துள்ளமையுடன் நிறுவனம் தன்னுடைய சந்தைப் பங்குகளை இரண்டு துறைகளிலும் விரிவாக்கம் செய்யக்கூடியதாக இருந்துள்ளது. ஆயுள் காப்புறுதித் துறையில் சந்தைப் பங்கு 4.9% இல் இருந்து 5.3% ஆக அதிகரித்தமையினால் சந்தையில் 7வது இடத்திலிருந்து 6வது இடமாக சந்தை நிலை முன்னேற்றமடைந்துள்ளது. இதேபோன்று, பொதுக் காப்புறுதித் துறையில் 3.3% இல் இருந்து 4.0% மான வளர்ச்சியின் ஊடாக சந்தைப் பங்கில் 8வது இடத்தைத் தக்கவைத்துள்ளது.

வரிக்குப் பின்னரான இலாபத்தில் ஏற்பட்ட வளர்ச்சியின் காரணமாக பங்கொன்றிற்கான அடிப்படை உழைப்பு (EPS) 8.3% ஆக வளர்ச்சியடைந்துள்ள அதேவேளையில் பங்குதாரர் உரிமை மூலதன வருவாய் (ROE) 17% ஆக இருக்கின்றது.

**பொதுக் காப்புறுதித்துறை**

பொதுக் காப்புறுதி வியாபாரத்தில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு அனைத்து பிரதான வியாபார வகுப்புகளும் பங்களிப்புச் செய்துள்ளன. இவற்றுள் கப்பல் காப்புறுதி 45% உயரிய வளர்ச்சி பெற்றுள்ளது. எனினும் இது ஒப்பீட்டளவில் குறைந்த வளர்ச்சி வீதமாகும். வாகனக் காப்புறுதித் துறையில் ஏற்பட்ட 30% வளர்ச்சி பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் வளர்ச்சிக்கு பிரதான காரணியாகும். ஏனெனில் 2014 ஆம் ஆண்டு பெறப்பட்ட மொத்த GWP யில் 72% இத்துறையில் இருந்தே பெறப்பட்டது. மொத்த GWP க்கு பங்களிப்பு செய்த இரண்டாவது மிகப்பெரிய துறை தீ மற்றும் பொறியியல் காப்புறுதி துறையாகும். இது மொத்த GWP யில் 15% பங்களிப்பை செய்துள்ளது. எனினும் விலையில் ஏற்பட்ட தொடர்ச்சியான போட்டி காரணமாக இதன் வளர்ச்சி 8% க்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டது.

நிகர கோரிக்கை விகிதம் 66% இல் இருந்து 72% ஆக அதிகரித்தமை வளர்ச்சி விகிதத்தில் அழுத்தத்தை பிரயோகித்ததுடன் இது கடந்த வருடங்களில் இருந்த குறைந்து செல்லும் போக்கிலிருந்து எதிர்மாறான போக்கைக் காட்டுகிறது. எனினும் உயரிய கோரிக்கைகளின் பாதிப்புகளை பகுதிகளளவில் தணிப்பதன் ஊடாக செலவு விகிதம் 39% இல் இருந்து 38% ஆக வீழ்ச்சியடைந்தது. ஒன்றிணைந்த விகிதம் 105% இல் இருந்து 110% ஆக அதிகரித்து பலவீனமான இலாபத்தை பிரதிபலிக்கிறது. எனவே இதுபற்றி கவனிக்க வேண்டியதன் அவசியம் உணரப்பட்டது. இது தொடர்பாக ஏற்கனவே பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. உதாரணமாக விலைகளை அதிகரித்தல் மற்றும் சில நட்டத்தை ஏற்படுத்தும் கூட்டுறவு கணக்குகளை மீள் புதிப்பித்தலை தவிர்த்தல் என்பவற்றின் மூலம் 2015 ஆம் ஆண்டு இந் நிலையில் முன்னேற்றத்தை ஏற்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது. அல்லாவிடில் HNB ஜெனரல் இன்சூரன்சுடைய முகாமைத்துவ குழு ஒரு ஏற்றுக்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு எவ்வித தயக்கத்தையும் காட்டாது.

எனினும் முதலீட்டு வருவாயில் ஏற்பட்ட 21% கவர்ச்சி மிக்க வளர்ச்சியின் அனுசரணையுடன் நிறுவனம் வரி செலுத்துகைக்கு முன்னரான இலாபமாக ரூபா 211 மில்லியனை பொதுக் காப்புறுதி துறையில் இருந்து பெற்றுகொள்ள இயலுமாக இருந்துள்ளது. இது நிறுவனத்தின் முழுமையான இலாபத்திற்கு பிரதான பங்களிப்பை வழங்கியுள்ளது.

**ஆயுள் காப்புறுதித்துறை**

மீளாய்வுக்கு உட்பட்ட வருட காலப்பகுதியின் போது ஆயுள் காப்புறுதி வியாபாரம் 16% வளர்ச்சியை பதிவு செய்துள்ளது. 2013 ஆம் ஆண்டு அடையப்பெற்ற 34% வளர்ச்சி வீதத்துடன் ஒப்பிடுகையில் குறைந்த மட்ட வளர்ச்சி வீதமாக இருந்த போதிலும் இரண்டு காரணங்களுக்காக இது உண்மையிலேயே பாராட்டப்படக் கூடிய செயற்பாடு என்பதை குறிப்பிட வேண்டும். ஆயுள் காப்புறுதி வியாபார வளர்ச்சியைப் பெறுவதற்கு குறுகியகால ஒற்றை தவணை கட்டுப்பண முதலீட்டுக் கொள்கைகள் மீது தங்கியிருந்தமை 11% வீழ்ச்சியை காட்டியுள்ளது. இரண்டாவது நிரந்தர ஆயுள் கட்டுப் பண காப்புறுதியில் இருந்து பெற்ற முதலாவது கட்டுப்பணத்தின் வளர்ச்சி 43% ஆக அதிகரித்தமை இவ்வளர்ச்சிக்கு பிரதான காரணமாகும். இது நிச்சயமாக ஒரு அபிவிருத்தியாகும். ஏனெனில் நிரந்தர ஆயுள் கட்டுப் பண காப்புறுதியில் வளர்ச்சி குறைந்த மட்டத்தில் இருந்தமை கடந்த சில வருடங்களாக கவனத்தில் கொள்ளப்படக்கூடிய விடயமாக இருந்தது. ஒரு நீண்ட காலப்பகுதியில் நிரந்தர ஆயுள் கட்டுப் பண காப்புறுதி அதிக இலாபங்களை ஈட்டித் தருவதற்கு இயலுமாக இருப்பதால் இதனை இக்கூட்டுத்துறையில் முன்னேற்றமான ஒரு நகர்வாகக் கருதலாம். ஈட்டு தணித்தல் கொள்கைகளின் (MRP) விற்பனையும் அதிகரித்துள்ள வீட்டுக் கடன் சந்தையின் பங்களிப்பால் விரைவான வளர்ச்சியை காட்டியுள்ளது. இது மொத்த GWP யில் 32% ஆக காணப்பட்டது.

நீண்டகால காப்புறுதி நிதியத்திற்கு தேவைப்படுகின்ற உண்மையான ஒதுக்கமாக இருக்க வேண்டிய ரூபா 761 மில்லியனை விட அதிகரித்துள்ளமையை வருட இறுதியில் மேற்கொள்ளப்பட்ட நீண்டகால வியாபார மதிப்பிடல் காட்டுகின்றது. மொத்த மிகை இலாபத்தில் ரூபா 252 மில்லியன் கடன் தீர் ஆற்றலுக்காக பயன்படுத்தப்பட்டது. அத்துடன் ரூபா 172 மில்லியன் எதிர்காலத்தில் வழங்கப்பட வேண்டிய மிகை ஊதியம் மற்றும் எதிர்பாரா செலவுகளுக்காக வைக்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை ஆயுள் காப்புறுதி கொள்கைகளை வைத்திருப்போர் மற்றும் பங்குதாரர்கள் ஆகியோரிடையே பங்கிடப்பட்டது. காப்புறுதி கொள்கைகளை வைத்திருப்போருக்கிடையில் ரூபா 109 மில்லியன் மிகை ஊதியமாக பகிரப்பட்டது. ரூபா 228 மில்லியன் பங்குதாரர்களின் கணக்கிற்கு ஆயுள் காப்புறுதி வியாபாரத்தில் இருந்து பெற்ற மிகை இலாப கணக்காக கைமாற்றம் செய்யப்பட்டது. மிகை ஊதியம் தொடர்பாக பிரகடனம் செய்யப்பட்டமைக்கு மேலதிகமாக ரூபா 1,000/- க்கு ரூபா 65/- வரையான உயரிய விகிதத்தில் இலாபத்துடனான பங்குபற்றுதலுடன் காப்புறுதி கொள்கைகள் தொடர்பாக ஒதுக்கப்பட்டது. மேலும் நிறுவனம் பங்குலாப அடிப்படையிலான கொள்கைகளுக்கு 8% பங்குலாபத்தை பிரகடனப்படுத்தியது. இது தற்போதைய சந்தை நிலைமைகளில் ஒரு கவர்ச்சிகரமான திரும்பலாகும். இதற்காக 15.3 மில்லியன் ரூபாவுக்கான ஏற்பாடு ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. பங்குதாரர்களுக்கான மிகை இலாபத்தின் கைமாற்றம் 26% ஆக அதிகரித்துள்ள அதேவேளையில் மிகை இலாபத்தை கைமாற்றம் செய்யப்பட்ட பின்னர் கூட நிறுவனம் ஆயுள் காப்புறுதி நிதியத்தை 28% ஆல் உயர்த்தி உள்ளது. தற்போது இத்தொகை ரூபா 5.6 பில்லியனாகும்.

**முதலீடுகள்**

நிறுவனம் அதன் முதலீட்டு முகாமைத்துவத்தில் இருந்து குறிப்பிடத்தக்களவு பங்களிப்பினை பெற்றுக்கொண்டுள்ளது. ஆயுள் காப்புறுதி முதலீட்டு வருமானம் 22% ஆலும் பொதுக் காப்புறுதி முதலீட்டு வருமானம் 19% ஆகவும் அதிகரித்துள்ளது. இவ்வருட காலப்பகுதியில் நிறுவனம் இன்னுமொரு முக்கியமான மைல்கல்லை பதித்துள்ளது. அதாவது, முதல் தடவையாக நிறுவனத்தினுடைய ஒன்றிணைந்த முதலீட்டு வருமானம் ஒரு பில்லியன் ரூபாவைத் தாண்டியுள்ளது. வட்டி வீதத்தில் மிகவும் மோசமான வீழ்ச்சியை காட்டிய சவால்மிக்க முதலீட்டு சூழலில் முதலீட்டு வருமானத்தில் இத்தகைய வளர்ச்சி வீதத்தை அடைந்தமை குறிப்பிடத்தக்க ஒரு அம்சமாகும்.

வட்டி வீதம் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்ததன் காரணமாக நிறுவனம் தன்னுடைய அவதானத்தை முறிகள் மற்றும் கூட்டுறவுத் தொகுதிக்கடன் ஆகியவற்றின் இரண்டாந்தர சந்தை மீது கவனம் செலத்தியது. இதன் மூலமாக இங்கு குறிப்பிடப்பட்ட நன்மைகளையும் வாய்ப்புக்களையும் பெற்றுக்கொண்டது. வட்டி வருமானத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியை ஈடு செய்யும் வகையில் நிறுவனம் அரசாங்க முறிகளின் விற்பனையில் இருந்து ரூபா 69.7 மில்லியனையும் கூட்டுறவுத் தொகுதிகள் கடன்களில் இருந்து ரூபா 26.2 மில்லியனையும் முதலீட்டு வருவாய்களாக பெற்றுக்கொண்டது.

நிறுவனம் ஒப்புரவுச் சந்தையிலும் பல அனுகூலங்களைப் பெற்று வளர்ச்சியை ஈட்டியுள்ளது. பங்குச் சந்தையில் இருந்து நிறுவனம் 12.2 மில்லியன் ரூபாவை வருமானமாக பெற்றுக்கொண்டதுடன் தேறத்தக்க இலாபமாக ரூபா 98.9 மில்லியனை பதிவு செய்துள்ளது. ஒப்பிட்டளவில் இருந்து நிலையான நாணய பரிமாற்று விகித சூழ்நிலைகளின் காரணமாக நிறுவனம் அதன் வெளிநாட்டு நாணய வைப்புக்களில் இருந்து குறிப்பிடத்தக்களவு பலன்களை பெற முடியவில்லை.

**பிரிப்பாட்டு நடைமுறை**

HNB ஜெனரல் இன்சூவரன்ஸ் லிமிடெட் எனும் பெயரின் கீழ் முழுமையாக உரிமை கொள்ளப்பட்ட உபநிறுவனம் ஒன்றைத் ஸ்தாபிப்பதன் மூலம் இது நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் பொதுக் காப்புறுதி வர்த்தகம் 2015 ஜனவரி 01 ஆம் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் புதிய நிறுவனத்திடம் கைமாற்றம் செய்யப்பட்டுள்ளது. நிறுவன பங்குதாரர்கள் மற்றும் காப்புறுதி கொள்கை வைத்திருப்போர் ஆகியோரிடம் இருந்து ஆரம்பக் கட்டத்திலேயே அங்கீகாரத்தைப் பெற்று பிரிப்பாடு தொடர்பான நடைமுறையை சரிவர பின்பற்றியது. புதிய நிறுவனத்தை உருவாக்குவதற்கான புதிய உரிமத்தைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பம் இணங்கப்பட்ட முடிவுத் திகதியில் சமர்ப்பிக்கப்பட்டது. IBSL உடன் ஒரு பொது காப்புறுதியாளராக நிறுவனம் பதிவு செய்யப்பட்ட பின்னர் நாம் இல. 43 2001 ஆம் ஆண்டின் காப்புறுதித்துறை ஒழுங்கமைத்தல் சட்டத்தின் பிரிவு 53 க்கு அமைவாக நடைமுறையில் இருந்த பொதுக் காப்புறுதி வியாபாரத்தை இந்தப் புதிய உறுப்பாண்மைக்கு கைமாற்றுவதற்கான அங்கீகாரத்தை மாவட்ட நீதிமன்றத்தில் இருந்து பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கையை மேற்கொண்டோம். நீதிமன்றத்தின் அங்கீகாரத்தை பெற்ற பின்னர் 2015 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் திகதி வியாபாரத்தை பொருத்தமான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுடன் HNB ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிட்டட்டுக்கு கைமாற்றம் செய்தோம். மேலே விபரிக்கப்பட்ட சட்ட ரீதியான நடவடிக்கைகளுடன் நாம் ஒரு சுமுகமான நிலைமாற்றத்தை உறுதிப்படுத்துவதற்காக தடையற்ற உள்ளக ரீதியான நிறுவன மாற்றங்களை மேற்கொண்டோம். ஏற்கனவே இருந்த சந்தைப்படுத்தல் மற்றும் பங்கீட்டுப் பிரிவு இரண்டையும் ஒதுக்கிவிட்டு 2014 ஆம் ஆண்டு மார்ச் 01 ஆம் திகதியில் இருந்து அமுலுக்கு வரும் வகையில் பங்கீட்டு வலையமைப்பு இரண்டாகப் பிரிக்கப்பட்டு ஆயுள், பொதுகாப்புறுதிக்கான பொது முகாமையாளர்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

2014 ஆம் ஆண்டு ஒக்டோபர் 01 ஆம் திகதியில் இருந்து துணை சேவைகள் இரண்டாகப் பிரிக்கப்பட்டன. அத்துடன் சில உயர்மட்டப் பணிகள் தாய்க் கம்பனியினுள் பகிர்ந்து கொள்ளப்பட்ட சேவைகளாக தக்கவைத்துக் கொள்ளப்பட்டது. இரண்டு பொது முகாமையாளர்களும் 2015 ஜனவரி 01 ஆம் திகதியில் இருந்து பிரதம செயற்பாட்டு அலுவலர்களாக பதவியேற்றம் செய்யப்பட்டதுடன் அவர்களுக்கு ஒவ்வொரு கம்பனிகளிலும் பிரதம அலுவலர் மற்றும் குறிப்பிட்ட அலுவலர் என்ற அடிப்படையில் நியதிச் சட்ட அடிப்படையிலான பொறுப்புக்கள் அளிக்கப்பட்டுள்ளன.

**மூலதனம் மற்றும் கடன்தீர்க்கும் ஆற்றல்**

நிறுவனம் எந்தவிதமான மேலதிக முதலீட்டையும் அதிகரிக்காது வியாபார பிரிப்பாட்டு நடவடிக்கைகளில் ஏற்பட்ட முதலீட்டுத் தேவைப்பாடுகளை சௌகரிகமாக சந்திக்க முடிந்தது. நிறுவனம் வியாபார உரிமத்தைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கு முன்பே HNB ஜெனரல் இன்சூரன் லிமிட்டெட்டில் ரூபா 100 மில்லியனை முதலீடு செய்தது. இதனையடுத்து, 2015 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் திகதி 900 மில்லியன் ரூபா மேலதிகமாக புதிய நிறுவனத்தில் முதலீடு செய்யப்பட்டது. இதன் மூலமாக அதன் முதலீட்டை ஒரு பில்லியனாக அதிகரித்தது. இது நியதிச் சட்டத்தில் இருகக்க்கூடிய முதலீட்டு தொகையான ரூபா 500 மில்லியனை விட மிக அதிகமாகும். பொதுக் காப்புறுதி வியாபாரத்துறையின் இடர் அடிப்படையில் அமைந்த மூலதனத் தேவைப்பாடுகளையும் கடன் தீர்க்கும் ஆற்றலையும் சந்திப்பதற்கு இந்த மூலதனம் போதுமானதாக இருக்கின்றது. நிறுவனம் ஏறக்குறைய 1.4 பில்லியன் ரூபா மூலதனத்தை ஆயுள் காப்புறுதி வியாபாரத்திற்கு ஆதரவு வழங்குவதற்காக ஒதுக்கி வைத்துள்ளது. நிறுவனத்தினால் தொடர்ச்சியாக நடத்தப்படும் ஆயுள் காப்புறுதி வியாபாரத்தின் இடர் அடிப்படையில் அமைந்த மூலதன தேவைப்பாடுகள் மற்றும் கடன் தீர்க்கும் ஆற்றலை சந்திப்பதற்கு இது போதுமானதாகும்.

மூலதனத்தின் போதிய தன்மையை உறுதிப்படுத்துவதன் ஊடாக நிறுவனம் காப்புறுதி நிதி வலிமை தரமிடல் மற்றும் தேசிய நீண்டகால தரமிடல் என்பவற்றை நிரல்படுத்தும் பிட்ச் ரேடிங் லங்கா லிமிட்டெட்டில் (FITCH RATING LANKA LIMITED) 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஒரு உறுதியான வெளித்தோற்றத்தைக் காட்டி நிற்கின்றது. கம்பனி அதன் புதிதாக உருவாக்கக்கபபட்ட உப நிறுவனமான HNB ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிட்டட்டும் அதே நிரல்படுத்தலை பெற்றுக்கொண்டமை வரவேற்கப்பட வேண்டிய ஒரு விடயமாவதுடன் நிறுவனம் இரண்டாக பிரிக்கப்பட்ட பின்னரும் கூட அத்தகைய ஒரு இடத்தை பெற்றுக்கொள்ளும் முதலாவது நிறுவனம் HNB ஜெனரல் இன்சூரன்ஸ் ஆகும்.

**நிர்வாகம்**

மீளாய்வுக்கு உட்பட்ட வருட காலப்பகுதியின் போது நிறுவனம் கூட்டுறவு ஆட்சியில் உயரிய தரத்தை பேணுவதற்கான அர்ப்பணிப்பை செய்துள்ளதுடன் அதன் மதிப்பையும் தக்கவைத்துக் கொண்டுள்ளது. மேலே விபரிக்கப்பட்டவாறு நிறுவனம் அனைத்து பங்குபற்றுநர்களுடைய உடன்பாட்டுடன் பிரிபாட்டு நடைமுறையை கையாண்ட முறைமை பாராட்டப்படக் கூடியதாகும். இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் (ICASL) நடாத்தப்பட்ட 50 ஆவது வருடாந்த அறிக்கை விருது வைபவத்தில் கூட்டுறவு ஆட்சி வெளிப்படுத்தலுக்காக வெள்ளி விருது ஒன்றை பெற்றுக்கொண்டுள்ளது.

2016 ஆம் ஆண்டு மே 21 ஆம் திகதியில் இருந்து செயற்பாட்டுக்கு வரும் வகையில் திரு. பிரதாப் குமார் டி சில்வா இயக்குநர் சபையில் இருந்து விலகி புதிதாக கூட்டிணைக்கப்பட்ட உபநிறுவனத்தின் இயக்குநர் சபையில் இணைந்துள்ளார். இவர் 6 வருடங்களாக இயக்குநர் சபையில் சேவையாற்றினார். அவருடைய நீண்ட சேவைக்காலத்தின் போது அவரால் வழங்கப்பட்ட ஆதரவு மற்றும் ஆலோசனைகளை நான் பாராட்டுவதோடு, அவருடைய சேவை தொடர்ந்தும் கிடைக்குமென எதிர்பார்க்கின்றேன்.

கலாநிதி சிவகுமார் செல்லையா 2014 ஆம் ஆண்டு ஜுன் 17 ஆம் திகதியில் இருந்து செயற்பாட்டுக்கு வரும் வகையில் திரு பிரதாப் குமார் டி சில்வாவின் இடத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார். அவரை நான் மனமார வரவேற்பதோடு நிறுவனத்தின் முன்னேற்றத்திற்காக அவரிடம் இருந்து நல்லதொரு பங்களிப்பை எதிர்பார்க்கின்றேன்.

புதிய ஒழுங்கு விதிகள் கட்டாயமானதாக வருவதற்கு முன்பு அவற்றுடன் தன்னிச்சையாகவே இணங்கி ஒழுகுவதற்கான எண்ணத்துடனும் நிறுவனத்தின் ஆட்சிக் கட்டமைப்பை மேலும் முன்னேற்றுவதற்காகவும் ஒரு பிரத்தியேக சபையாக சம்பந்தபட்டவர்களுடனான கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்புபட்ட மீளாய்வுக் குழு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. திரு.சரத் ரத்வத்தே இதன் தலைவராவார். திரு. மஹேந்திர ஜயசேகரவும் நானும் இக்குழுவின் ஏனைய உறுப்பினர்கள். இக்குழு நிறுவன சம்பந்தபட்டவர்களுடன் நடத்துகின்ற கொடுக்கல் வாங்கல்களை மேற்பார்வை செய்யும்.

தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையுடைய தொடர்ச்சியான அறிவுரைகள் ஆலோசனைகள் வழிகாட்டல்கள் என்பவற்றுக்கு என்னுடைய மனமார்ந்த பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கின்றேன். பிரதம செயற்பாட்டு அலுவலர்கள் பிரிவு தலைவர்கள், முகாமையாளர்கள், ஊழியர்கள், வெளிக்கள முகாமைத்துவம் மற்றும் காப்புறுதி ஆலோசகர்கள் ஆகியவற்றின் கூட்டாண்மை முயற்சியினாலேயே நிறுவனம் சிறந்த பெறுபேறுகளை பெற்று ஒரு புதிய கூட்டுறவு அமைப்புக்கு நிலைமாற்றம் அடைந்துள்ளது. இவர்கள் அனைவருடைய பங்களிப்புக்கும் நான் நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன். நான் என்னுடைய குழுவுடன் இணைந்து எம்முடைய அனைத்து காப்புறுதி தரகர்கள் HNB கிளைகளின் முகாமையாளர் மற்றும் ஊழியர்கள் மற்றும் ஏனைய இடையீட்டாளர்கள் மீள் காப்புறுதியாளர்கள் மீள் காப்புறுதி தரகர்கள் மற்றும் ஏனைய உபாய பங்குதாரர்கள் ஆகியோருடைய சிறந்த ஆதரவு மற்றும் புரிந்துணர்வு என்பவற்றையும் பாராட்டுகின்றேன்.

**உபாய கண்ணோட்டம் மற்றும் எதிர்கால பயணம்**

13 வருட காலப்பகுதிக்கு மேற்பட்ட ஒரு காலப்பகுதியில் நிறுவனம் அதனுடைய அனைத்து பங்குபற்றுநர்களுக்கும் தொடர்சியாக பெறுமதிமிக்க சேவைகளை அளித்து வந்துள்ளதுடன் HNB அசூரன்ஸ் இவ்வருடம் தொடக்கம் பிரத்தியேக ஆயுள் மற்றும் பொதுக் காப்புறுதி நிறுவனங்களில் ஒரு புதிய குழு கட்டமைப்பின் ஊடாக புதிய பயணம் ஒன்றை ஆரம்பித்து அனைத்து பங்குபற்றுநர்களுக்கும் பெறுமதியான சேவைகளை வழங்கும். HNB அசூரன்ஸ் முழுமையாக ஆயுள் காப்புறுதி வியாபாரத்தில் கவனம் செலுத்தும் அதேவேளை எமது முழுமையாக உரிமை கொள்ளப்பட்ட உப நிறுவனம் பொதுக் காப்புறுதி வியாபாரத்தில் தன்னுடைய கவனத்தை செலுத்தும்.

நாட்டில் ஆயுள் காப்புறுதி சேவை வழங்குநர்களில் 6வது பெரிய நிறுவனமான HNB அசூரன்ஸ் கடந்த பல வருடங்களாக கட்டியெழுப்பிய வளர்ச்சியை பேணிப் பாதுகாப்பதன் ஊடாக இலங்கையில் உள்ள ஐந்து பிரதான நிறுவனங்களுள் தம்முடைய இடத்தைப் பெற்றுக்கொள்வதற்கு மிக அருகாமையிலுள்ளது. இதனை அடையும் முகமாக நிறுவன வளர்ச்சி தொடர்பான தன்னிச்சை மற்றும் கூட்டிணைப்பு முறையிலான உபாயங்களை பயன்படுத்தும். இது விலையிடல் மற்றும் ஒதுக்கம் தொடர்பான கொள்கைகள் என்பவற்றை ஆயுள் காப்புறுதி துறையில் இலாபத்தை முன்னேற்றுவதற்காக மீளாய்வு செய்யும். புதிய "ஆயுள் மதிப்பீட்டு மென்பொருள்"(Prophet) முறைமையை அமுல்படுத்தல் மற்றும் RBC கட்டமைப்புக்கு அமைவாகவுள்ள மொத்த கட்டுப்பண மதிப்பிடல் அடிப்படையிலான மதிப்பிடல் முறைமைக்கு நிலைமாற்றம் அடைவதன் ஊடாக இவ்விடயம் நிறைவேற்றப்படும்.

எம்முடைய புதிய உப நிறுவனமானது பொதுக் காப்புறுதி சந்தையில் தன்னுடைய அந்தஸ்தை மேம்மைப்படுத்துவதற்காக இதனையொத்த வளர்ச்சி உபாயம் ஒன்றை பயன்படுத்தப்படும். நிறுவனங்கள் இரண்டாக வேறுபடுத்தப்பட்ட பின்பு பொதுக் காப்புறுதிச் சந்தையில் போட்டியிடுவதற்கு சில நிறுவனங்கள் சவால்களை எதிர்நோக்கும்.

ஆகையால் தொழில் ஒன்றிணைப்புக்கான மேலும் பல சந்தர்ப்பங்கள் சந்தையில் இருக்கலாம் என நாம் நம்புகின்றோம். நிறுவனம் தொடர்ச்சியாக கூட்டிணைப்பு மற்றும் கையேற்பு ஆகியவற்றுக்கான வாய்ப்புக்கள் உள்ளதா என்பதை அவதானிக்கும். அதன் ஊடாக அதனுடைய பங்குபற்றுநர்களுக்கு பெறுமதிகளை உருவாக்கும். மேலும் நிறுவன ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக எதிர்காலத்தில் குறைந்தபட்ச மிதக்கும் தேவைப்பாடுகளை சந்திக்கும் வகையில் ஒரு குறிப்பிடத்தக்களவு பங்குகளை எதிர்காலத்தில் பங்குப்பரிமாற்றச் சந்தையில் விடுவிப்பதன் ஊடாக HNB ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிட்டெட் நிரல்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதேவேளையில் தொழில்நுட்ப நிபுணத்துவம் மற்றும் உலகளாவிய சிறந்த நடைமுறைகள் என்பவற்றின் மூலம் வியாபாரத்திற்கு மேலதிக பெறுமதியை சேர்க்கும் அடிப்படையில் நீண்ட கால முதலீட்டாளரை எதிர்பார்க்கின்றது.

நிறுவனம் புதிய உப நிறுவனத்திற்கு பகிரப்பட்ட சேவைகள் ஊடாக உயர்ந்த முகாமைத்துவம் சார் உள்ளீடுகளை வழங்கும். இது ஆயுள் மற்றும் பொதுக் காப்புறுதித்துறை சேவைகளை முன்னேற்றுவதற்கு உதவும். இது நிதி, தகவல் தொழில்நுட்பம், சந்தைப்படுத்தல், மனிதவளம், சட்ட, நிர்வாக பணிகளை உள்ளடக்கும். எனினும் இரண்டு வியாபார நடவடிக்கைளுக்கான நாளாந்த செயற்பாடுகளுக்குத் தேவையான சில பணிகள் ஏற்கனவே துணைச் சேவைகள் பிரிவுகளுக்கு கையளிக்கப்பட்டுள்ளது. அப்பிரிவுக்கு பொறுப்பான பிரதம செயற்பாட்டு அலுவலர்களின் கட்டுப்பாட்டின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது. 2015 ஆம் ஆண்டு அந்த பிரிவுகளுடைய சுமுகமான செயற்பாட்டை உறுதிப்படுத்துவதற்காக புதிய அமைப்பின் கீழ் விசேட கவனம் செலுத்தப்படும்.

நிறுவனம் புதிய கட்டமைப்பின் கீழ் எந்த சூழலிலும் ஏற்படுகின்ற சவால்களுக்கும் முகம் கொடுக்கக்கூடிய வகையில் உருவாக்கப்பட்டுள்ளது என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு. மேலும் பொறுப்பேற்றுள்ள நாட்டின் புதிய அரசாங்கத்தினால் நாட்டில் ஏற்பட்டுள்ள புதிய சூழ்நிலைகளின் கீழ் ஏற்படுத்தப்படுகின்ற புதிய வாய்ப்புக்களையும் பயன்படுத்தும் என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு.

மஞ்சுள டி சில்வா
முகாமைத்துவ பணிப்பாளர்
09 பெப்ரவரி 2015

# HNB ASSURANCE PLC

## நிதி நிலைமைக் கூற்று

| *31ஆம் திகதி டிசம்பர் உள்ளபடியான* | குழுமம் | கம்பனி | |
|---|---|---|---|
| | 2014 | 2014 | 2013 |
| | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 |
| **சொத்துக்கள்** | | | |
| அருவச் சொத்துக்கள் | 51,622 | 51,622 | 53,807 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 133,942 | 133,942 | 137,009 |
| பிற்போட்ட வரி சொத்து | - | - | 2 |
| முதலீடுகள் | 8,277,895 | 8,171,269 | 6,656,438 |
| உப நிறுவனத்தின் மீதான முதலீடு | - | 100,000 | - |
| ஆயுட்காப்புறுதிதாரருக்கான கடன்கள் | 71,082 | 71,082 | 53,656 |
| மீள் காப்புறுதி நிலுவைகள் | 162,260 | 162,260 | 105,390 |
| கட்டுப்பண நிலுவைகள் | 364,051 | 364,051 | 301,182 |
| ஏனைய சொத்துக்கள் | 683,149 | 682,639 | 575,180 |
| காப்புறுதி கோட்பாட்டு - பிற்போடப்பட்ட செலவுகள் | 52,072 | 52,072 | 32,912 |
| காசும் காசுக்கு சமனானவையும் | 173,245 | 171,217 | 144,087 |
| **மொத்த சொத்துக்கள்** | 9,969,318 | 9,960,154 | 8,059,663 |
| | | | |
| **பங்குதாரர் உரிமைகளும் பொறுப்புக்களும்** | | | |
| | | | |
| **பங்குதாரர் உரிமைகள்** | | | |
| கூறப்பட்ட மூலதனம் | 1,171,875 | 1,171,875 | 1,171,875 |
| வருமான ஒதுக்கீடுகள் | 1,196,546 | 1,189,039 | 941,820 |
| விற்பனைக்காக தயாராகவுள்ள ஒதுக்கீடுகள் | 3,590 | 3,523 | 1,427 |
| ஏனைய ஒதுக்கீடுகள் | 1,177 | 1,177 | 2,172 |
| ஆயுட்காப்புறுதிதாரருக்கான ஒதுக்கப்பட்ட நிதியம் | 40,748 | 40,748 | (4,182) |
| தாய் கம்பனியின் உரிமை பங்குதாரரிட்கு ஒதுக்கப்பட்ட உரிமைகள் | 2,413,936 | 2,406,362 | 2,113,112 |
| கட்டுபாட்டில் அல்லா உரிமையாளர்களுக்களின் தேவைகாக | - | - | - |
| மொத்த பங்குதாரர் உரிமைகள் | 2,413,936 | 2,406,362 | 2,113,112 |
| | | | |
| **பொறுப்புக்கள்** | | | |
| ஆயுள் காப்புறுதி கோட்பாட்டு பொறுப்புக்கள் | 5,562,648 | 5,562,648 | 4,348,490 |
| பொது காப்புறுதி கோட்பாட்டு பொறுப்புக்கள் | 1,279,138 | 1,279,138 | 1,011,102 |
| ஊழியர் பணிக்கொடுப்பனவு பொறுப்புக்கள் | 71,493 | 71,493 | 56,637 |
| நடைமுறையிலுள்ள வரிப் பொறுப்புக்கள் | 12,012 | 10,422 | 35,143 |
| பிற்போட்ட வரி பொறுப்புக்கள் | 8,845 | 8,845 | - |
| மீள் காப்புறுதிகடன் கொடுநர் | 110,778 | 110,778 | 100,881 |
| ஏனைய பொறுப்புக்கள் | 510,468 | 510,468 | 394,298 |
| மொத்த பொறுப்புக்கள் | 7,555,382 | 7,553,792 | 5,946,551 |
| | | | |
| **மொத்த பங்குதாரர் உரிமைகளும் பொறுப்புக்களும்** | 9,969,318 | 9,960,154 | 8,059,663 |

## HNB ASSURANCE PLC

### முழுமையான வருமானக் கூற்று

| 31ஆம் திகதி டிசம்பர் முடிவடைந்த ஆண்டிற்கான | குழுமம் 2014 ரூ.'000 | கம்பனி 2014 ரூ.'000 | கம்பனி 2013 ரூ.'000 | மாற்றம் கம்பனி % | மாற்றம் குழுமம் % |
|---|---|---|---|---|---|
| மொத்த விண்ணப்பக் கணிப்பு கட்டுப்பணம் | 4,665,618 | 4,665,618 | 3,877,730 | 20 | 20 |
| மீள்காப்புறுதிதாரர்களுக்காக செலுத்தப்பட்ட கட்டுப்பணம் | (601,022) | (601,022) | (526,005) | 14 | 14 |
| நிகர விண்ணப்பக் கணிப்பு கட்டுப்பணம் | 4,064,596 | 4,064,596 | 3,351,725 | 21 | 21 |
| ஈட்டப்படாத கட்டுப்பணத்திற்கான ஒதுக்கீட்டின் நிகர மாற்றம் | (232,621) | (232,621) | (82,544) | 182 | 182 |
| ஈட்டிய நிகர கட்டுப்பணம் | 3,831,975 | 3,831,975 | 3,269,181 | 17 | 17 |
| ***ஏனைய வருமானம்*** | | | | | |
| தேறிய உரிமைக் கொடுப்பனவுகள் | 824,015 | 816,876 | 785,177 | 4 | 5 |
| தேறிய தேறத்தக்க இலாபம் | 108,823 | 105,785 | 53,411 | 98 | 104 |
| நியம பெறுமதிகளின் தேறிய இலாபம் | 99,281 | 99,281 | 13,099 | 658 | 658 |
| கட்டணங்கள் மற்றும் தரகு வருமானம் | 136,960 | 136,960 | 72,900 | 88 | 88 |
| ஏனைய வருமானம் | 12,366 | 12,366 | 12,830 | (4) | (4) |
| | 1,181,445 | 1,171,268 | 937,417 | 25 | 26 |
| தேறிய வருமானம் | 5,013,420 | 5,003,243 | 4,206,598 | 19 | 19 |
| ***தேறிய உரிமை கொடுப்பனவுகள்*** | | | | | |
| தேறிய காப்புறுதி நன்மைகளும் இழப்பீட்டுக் கொடுப்பனவுகளும் | (1,528,233) | (1,528,233) | (1,558,659) | (2) | (2) |
| செலுத்தப்பட வேண்டிய காப்புறுதி ஈடுகளின் தேறிய மாற்றம் | (44,871) | (44,871) | (9,549) | 370 | 370 |
| ஆயுள் காப்புறுதி கோட்பாட்டு நிதியத்தில் ஏற்பட்ட மாற்றம் | (1,192,273) | (1,192,273) | (724,829) | 64 | 64 |
| ஏனைய செயற்பாட்டு மற்றும் பராமரிப்பு செலவுகள் | (1,303,710) | (1,303,130) | (1,084,148) | 20 | 20 |
| விண்ணப்பக்கணிப்பு மற்றும் நிகரக் கொள்வனவுச் செலவு | (474,826) | (474,826) | (381,259) | 25 | 25 |
| காப்புறுதி தொடர்பான வேறு செலவுகள் | (30,924) | (30,924) | (23,061) | 34 | 34 |
| **மொத்த நன்மைகள், இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய செலவுகள்** | (4,574,837) | (4,574,257) | (3,781,505) | 21 | 21 |
| வரிக்கு முந்திய இலாபம் | 438,583 | 428,986 | 425,093 | 1 | 3 |
| வருமான வரிச் செலவுகள் | (20,857) | (19,267) | (35,970) | (46) | (42) |
| ஆண்டிற்கான இலாபம் | 417,726 | 409,719 | 389,123 | 5 | 7 |
| **முழுமையான பிறவருமானம்** | | | | | |
| - நியமப் பெறுமதியின் தேறிய மாற்றம் நிதிச் சொத்து | 116,815 | 113,710 | 38,065 | 199 | 207 |
| - வருமான கூற்றுக்கு மாற்றப்பட்ட தேறப்பட்ட வருமானங்களும் இழப்புக்களும் | (69,722) | (66,684) | (45,838) | 45 | 52 |
| - விற்பனைக்காக தயாராகவுள்ள நிதிச் சொத்துக்களில் நியமப் பெறுமதியில் ஏற்பட்ட தேறிய மாற்றம் | (44,930) | (44,930) | 2,991 | (1,602) | (1,602) |
| வரையறுத்த நன்மை திட்டதின் மூலமான கணிப்பீட்டு வருவாய் | (995) | (995) | 2,172 | (146) | (146) |
| ஆண்டிற்கான மொத்த முழுமையான பிறவருமானம் | 1,168 | 1,101 | (2,610) | (142) | (145) |
| **ஆண்டிற்கான மொத்த முழுமையான வருமானம்** | 418,894 | 410,820 | 386,513 | 6 | 8 |
| **ஒதுக்கப்பட்ட இலாபமாக;** | | | | | |
| கம்பனி உரிமையாளர்களுகாக | 417,726 | | 389,123 | | 7 |
| கட்டுபாட்டில் அல்லா உரிமையாளர்களுக்காக | - | | - | | - |
| ஆண்டிற்கான இலாபம் | 417,726 | | 389,123 | | 7 |
| **ஒதுக்கப்பட்ட மொத்த முழுமையான பிறவருமானம்** | | | | | |
| கம்பனி உரிமையாளர்களுகாக | 418,894 | | 386,513 | | 8 |
| கட்டுபாட்டில் அல்லா உரிமையாளர்களுக்காக | - | | - | | - |
| **ஒதுக்கப்பட்ட மொத்த முழுமையான பிறவருமானம்** | 418,894 | | 386,513 | | 8 |
| **பங்கொன்றிற்கான உழைப்பு** | | | | | |
| - பங்கொன்றிற்கான அடிப்படை உழைப்பு (ரூ.) | 8.35 | 8.19 | 7.78 | | 7 |
| - பங்கொன்றிற்கான நீர்த்த உழைப்பு (ரூ.) | | 3.75 | 3.25 | | 15 |

## HNB ASSURANCE PLC

**உரிமைமாற்றல் கூற்று**

*31ஆம் திகதி டிசம்பர் 2014 முடிவடைந்த ஆண்டிற்கான*

| | கூறப்பட்ட மூலதனம் | வருமான ஒதுக்கீடுகள் | | விற்பனைக்காக தயாராகவுள்ள ஒதுக்கீடுகள் | ஏனைய ஒதுக்கீடுகள் | ஆயட்காப்புறுதி-தாரருக்காக ஒதுக்கப்பட்ட நிதியம் | மொத்த பங்குதாரர் உரிமைகள் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூ.'000 | ரூ.'000 | | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 |
| **01.01.2014 உள்ளபடி நிலுவை** | 1,171,875 | 941,820 | | 1,427 | 2,172 | (4,182) | 2,113,112 |
| ஆண்டிற்கான மொத்த முழுமையான வருமானங்கள் | | | | | | | |
| **ஆண்டிற்கான இலாபம்** | - | 417,726 | | - | - | - | 417,726 |
| ஆண்டிற்கான முழுமையான பிறவருமானங்கள் | | | | | | | |
| - நியமப் பெறுமதியின் தேறிய மாற்றம் நிதிச் சொத்து | - | - | | 47,093 | - | - | 47,093 |
| - விற்பனைக்காக தயாராகவுள்ள நிதிச் சொத்துக்களில் நியமப் பெறுமதியில் ஏற்பட்ட தேறிய மாற்றம் - ஆயுள் நிதி | - | - | | (44,930) | - | - | (44,930) |
| வரையறுத்த நன்மை திட்டதின் மூலமான கணிப்பீட்டு வருவாய் | - | - | | - | (995) | - | (995) |
| **மொத்த ஆண்டிற்கான முழுமையான பிறவருமானங்கள்** | - | - | | 2,163 | (995) | - | 1,168 |
| **ஆண்டிற்கான முழுமையான பிறவருமானங்கள்** | - | 417,726 | # | 2,163 | (995) | - | 418,894 |
| விற்பனைக்காக தயாராகவுள்ள நிதிச் சொத்துக்களில் நியமப் பெறுமதியில் ஏற்பட்ட தேறிய மாற்றம் ஆயுள் காப்புறுதி உரிமையாளர் ஒதுக்க நிதிக்கு மாட்டப்பட்டது | - | - | | - | - | 44,930 | 44,930 |
| **உரிமையாளர்களின் உரிமையில் நேரடியாக பதிவு செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள்** | | | | | | | |
| செலுத்தப்பட்ட பங்கிலாபம் - 2013 ஆம் ஆண்டிற்கான | - | (162,500) | | - | - | - | (162,500) |
| உபநிறுவனத்திற்கான பங்கு விநியோக செலவுகள் | - | (500) | | - | - | - | (500) |
| **கம்பனி உரிமையாளர்களுகான மொத்த பங்கீடு** | - | (163,000) | | - | - | 44,930 | (163,000) |
| **31.12.2014 உள்ளபடியான நிலுவை** | 1,171,875 | 1,196,546 | | 3,590 | 1,177 | 40,748 | 2,413,936 |

# HNB ASSURANCE PLC
## காசுப்பாய்ச்சல் கூற்று

| *31ஆம் திகதி டிசம்பர் 2014 முடிவடைந்த ஆண்டிற்கான* | குழுமம் 2014 ரூ.'000 | கம்பனி 2014 ரூ.'000 | கம்பனி 2013 ரூ.'000 |
|---|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான காசுப்பாய்ச்சல்கள்** | | | |
| வரிகளுக்கு முந்திய இலாபம் | 438,583 | 428,986 | 425,093 |
| *சீராக்கங்கள்* | | | |
| வட்டி வருமானம் | (808,970) | (801,831) | (766,566) |
| பங்கு வருமானம் | (15,045) | (15,045) | (18,611) |
| அருவச்சொத்து அழிப்புக்கள் | 17,975 | 17,975 | 16,029 |
| பெறுமானத்தேய்வு | 40,330 | 40,330 | 36,808 |
| ஊழியர் நன்மை நிதி ஏற்பாடு | 19,050 | 19,050 | 18,739 |
| நியமப் பெறுமதியின் தேறிய இழப்புக்கள் | (99,281) | (99,281) | (13,099) |
| தேறிய தேறத்தக்க இலாபம் | (108,823) | (105,785) | (53,411) |
| ஆதனம், பொறி மற்றும் உபகரண விற்பனையில் ஏற்பட்ட நட்டம் /(இலாபம்) | 174 | 174 | (3,188) |
| | (516,007) | (515,427) | (358,206) |
| தொழிற்பாட்டு சொத்துக்களின் மாற்றம் | (299,620) | (299,110) | (164,559) |
| தொழிற்பாட்டு பொறுப்புக்களின் மாற்றம் | 1,608,263 | 1,608,263 | 761,451 |
| தொழிற்பாட்டு செயற்பாடுகளின் ஊடாக காசுப் பாய்ச்சல் | 792,636 | 793,726 | 238,686 |
| வழங்கப்பட்ட பணிக் கொடுப்பனவு | (5,189) | (5,189) | (2,290) |
| தொழிற்பாட்டு செயற்பாடுகளின் ஊடாக காசுப் பாய்ச்ச்ல் | 787,447 | 788,537 | 236,396 |
| **முதலீட்டு செயற்பாடுகளின் ஊடாக காசுப் பாய்ச்சல்** | | | |
| முதலீட்டு பங்குகளின் தேறிய கொள்வனவு | (1,148,749) | (1,047,491) | (1,048,380) |
| பெற்ற வட்டி | 591,459 | 586,583 | 921,111 |
| பெற்ற பங்கிலாபம் | 15,228 | 15,228 | 18,168 |
| உப நிறுவனத்தின் மீதான முதலீடுகள் | - | (100,000) | |
| அருவச் சொத்து கொள்வனவு | (15,790) | (15,790) | (5,092) |
| ஆதனம், பொறி உபகரணம் கொள்வனவு | (37,747) | (37,747) | (54,238) |
| ஆதனம், பொறி உபகரணம் அகற்றல் பெறுவனவு | 310 | 310 | 4,329 |
| முதலீட்டு செயற்பாட்டிற்கான பயன்படுத்தப்பட்ட தேறிய காசு | (595,289) | (598,907) | (164,102) |
| **நிதியிடல் நடவடிக்கைகளிலான காசுப் பாய்ச்ச்ல்** | | | |
| செலுத்தப்பட்ட பங்கிலாபம் | (162,500) | (162,500) | (137,500) |
| உபநிறுவனத்திற்கான பங்கு விநியோக செலவுகள் | (500) | - | - |
| நிதியிடல் நடவடிக்கைகளிலான தேறிய காசு | (163,000) | (162,500) | (137,500) |
| **தேறிய காசு மற்றும் காசுக்கு சமனானவையில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு** | 29,158 | 27,130 | (65,206) |
| வருட ஆரம்பத்திலுள்ள காசு மற்றும் காசுக்கு சமனானவை | 144,087 | 144,087 | 209,293 |
| **வருட முடிவிலுள்ள காசு மற்றும் காசுக்கு சமனானவை** | 173,245 | 171,217 | 144,087 |
| **காசுப்பாய்ச்சல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்** | | | |
| **(அ) தொழிற்பாட்டு சொத்துக்களின் மாற்றம்** | | | |
| பிற்போடப்பட்ட கொடுப்பனவில் ஏற்பட்ட அதிகரிப்பு | (19,160) | (19,160) | (12,944) |
| ஆயுள்காப்புறுதிதாரருக்கான கடன் அதிகரிப்பு | (17,426) | (17,426) | (23,768) |
| மீள்காப்புறுதி நிலுவைகள் அதிகரிப்பு | (56,870) | (56,870) | 57,325 |
| கட்டுப்பண நிலுவைகளின் அதிகரிப்பு | (62,869) | (62,869) | (53,765) |
| ஏனைய சொத்துக்களின் அதிகரிப்பு | (143,295) | (142,785) | (131,407) |
| | (299,620) | (299,110) | (164,559) |
| **(ஆ) தொழிற்பாட்டு பொறுப்புக்களின் மாற்றம்** | | | |
| ஏனைய பொறுப்புக்களின் அதிகரிப்பு / (குறைவு) | 116,172 | 116,172 | (20,087) |
| காப்புறுதி கோட்பாட்டு பொறுப்புக்கள் அதிகரிப்பு - ஆயுள் அல்லாதது | 268,036 | 268,036 | 41,659 |
| காப்புறுதி கோட்பாட்டு பொறுப்புக்கள் அதிகரிப்பு - ஆயுள் காப்புறுதி | 1,214,158 | 1,214,158 | 722,251 |
| மீள் காப்புறுதி கடன்பட்டோரின் அதிகரிப்பு | 9,897 | 9,897 | 17,628 |
| | 1,608,263 | 1,608,263 | 761,451 |
| **(இ) காசு மற்றும் காசுக்கு சமனானவைகளில் ஏற்பட்ட நிகர அதிகரிப்பு / (குறைவு)** | | | |
| வருட முடிவிலுள்ள நிகர காசு மற்றும் காசுக்கு சமனானவை | 173,245 | 171,217 | 144,087 |
| வருட ஆரம்பத்திலுள்ள நிகர காசு மற்றும் காசுக்கு சமனானவை | 144,087 | 144,087 | 209,293 |
| காசு மற்றும் காசுக்கு சமனானவைகளில் ஏற்பட்ட நிகர அதிகரிப்பு / (குறைவு) | 29,158 | 27,130 | (65,206) |